**தலைப்பு 321 - கிழக்கு மாகாண சபை**

---------------------------------------------------------------------

## 1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் பிரதான செயற்பாடுகள்

-----------------------------------------------------------------------

### 1.1 தூரநோக்கு

---------

மாகாண மக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் திருப்திபடுத்தும் மிகச் சிறப்பான நல்லாட்சி முறைமை.

### 1.2 நோக்கம்

----------

மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கேற்ப வினைத்திறனுடைய பயனுறுதியான சேவைகளை வழங்குவதற்கு தேவையான வளங்களை ஒன்று திரட்டலும் அவற்றினை சிறப்பாகப் பயன்படுத்தலும்.

### 1.3 பிரதான செயற்பாடுகள்

--------------------------

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடு என்பவற்றின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

--------------------

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

-----------------------------------------------

கிழக்கு மாகாண சபைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா. 31,447.86 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா. 31,281.40 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, சேமிப்புக்களானது மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா. 166.46 மில்லியன் அல்லது 0.53 சதவீதம் ஆக காணப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 29இ349.00 | 29இ192.52 | 156.48 | 0.53 |
| மூலதனம் | 2இ098.86 | 2இ088.88 | 9.98 | 0.48 |
| **மொத்தம்** | **31இ447.86** | **31இ281.40** | **166.46** | **0.53** |

## 3. கணக்காய்வு அவதானிப்பு

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு அதற்கிணங்க பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 02 யூன் 2022 அன்று பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.